அநுகூல முனிவர் அருளிய

# பரமானந்த தீபம்

மற்றும்

அகஸ்தியர் அருளிய

# அடுக்குநிலை போதம்



அநுகூல முனிவர் அருளிய

# பரமானந்த தீபம்

மற்றும்

அகஸ்தியர் அருளிய

# அடுக்குநிலை போதம்

தொகுப்பு:

சாது இராஜேந்திர சுவாமிகள்

பாலக்காடு மண்ணூர் கிராமத்திலேயுள்ள

தலைமை ராமானந்த ஆசிரமம்

மடாதிபதி: சொப்பிரகாச சுவாமிகள் அனுமதியோடு

விலையில்லா புத்தகமாக வெளியீடு செய்கிறோம்

**பரமானந்த தீபம்**
மற்றும்
**அடுக்குநிலை போதம்**

தொகுப்பு : **சாது இராஜேந்திர சுவாமிகள்,**

மூன்றாம் பதிப்பு : 2019

ஒளியச்சு / புத்தக / அட்டை வடிவமைப்பு :
**ஐரிஸ் கிராபிக்ஸ், கோவை.**
0422 - 2575941 / 9789457940

அச்சாக்கம் : **ஜோதி எண்டர்பிரைசஸ், சென்னை - 5.**

பக்கம் : 48

**விலையில்லா புத்தகம்**

# கைவல்ய நவநீத ஞானப் பெருமன்றம்
# ஐந்தாம் மாநில மாநாடு

கைவல்ய நவநீத ஞானப் பெருமன்றத்தின் கௌரவத் தலைவர் கோவிலூர் மடாலயம், **சீர்வளர்சீர் மெய்யப்பஞானதேசிக சுவாமிகள்**, 9443337011.

தலைவர்:

தவத்திரு முத்தமிழ்
பண்ணை
ப. அரங்கராஜன் சுவாமிகள்
9786409336

கௌரவ ஆலோசகர்:

தவத்திரு பெருவெளி
வெங்கட்ராமன் சுவாமிகள்.
9443424148

செயலர்:

தவத்திரு முருகு.
ஏழுமலை சுவாமிகள்
9962609545

துறவியர் சங்கப் பொருளாலர்:

தவத்திரு சுவாமி
வேதாந்தானந்தா சுவாமிகள்
9486845618

மற்றும்

இராஜபாளையம்

தவத்திரு: கொ. பூமிநாதன் சுவாமிகள், 95668 67878
தவத்திரு: எ.வே. கல்யாண வெங்கட்ராமன் சுவாமிகள்,
9994088845

ஆகியோர் முன்னிருந்து நடத்துகின்ற இராஜபாளையம்
கைவல்ய நவநீத ஞானப் பெருமன்றம்
ஐந்தாவது மாநில மாநாட்டில்

## இந்நூல் விலையில்லாப் புத்தகமாக வெளியிடப்பட்டது.

# முன்னுரை

அநுகூல மாமுனிவரால் இயற்றியருளப்பட்ட பரமானந்த தீபமென்னும் இந்நூல் நான்கு மகா வாக்கியங்களின் சாராம்சமாக அமைந்துள்ளது. பக்திநெறியில் தொடங்கி, சாதனையில் தொடர்ந்து, தத்துவ விசாரமாக விரிந்து, தத்வமசி மகாவாக்கியமாக சுருக்கி, நேதி நேதி நேதி என்ற மார்கத்தில் தன்னை தரிசிப்பிக்கும் பொருட்டு மிகச் சிறப்பாக அருளி யுள்ளார். இதில் ஒவ்வொரு பாடலும் ஆன்மானுபூதியை சுட்டிக் காட்டியுள்ளதே இதன் தனிச்சிறப்பு. ஆத்மா அனாத்மா விசாரம் பண்ணக்கூடிய முமூட்சுக்களுக்கு தத்துவ விசாரணை செய்வதற்கும் ஏதுவாக தத்துவங்களனைத்தையும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டி, தத்துவங்கள் தோன்றும் விதமும், அதன் காரியமும், அவை நீங்கும் விதமும் எடுத்துக் கூறி, தத்துவாதீதமான ஆத்ம சொரூபத்தை உணரும் வண்ணம், அனைத்திற்கும் உயர் சாட்சி நீயே, என மிக அழுத்தமாக, அப்பியாசம் செய்பவர் உள்ளத்தில் உறைக்கும் வண்ணம் மிகத் தெளிவாக எடுத்துக் கூறிப் போந்துள்ளார் இந்நூல் ஆசிரியர். தானல்லாத தத்துவங்களனைத்தையும் நீக்கி, தானான வஸ்துவில் நிலை பெறுவதே முக்தி. அவ்வாறு தத்துவங்களை உணர்ந்து எதிரிட்டு தரிசித்து அனைத்தையும் விசாரித்து நீக்கி, தானான வஸ்துவாவதற்கு இந்நூல் மிக மிக உறுதுணையாக உள்ளது.

மேலும் இந்நூலின் ஆரம்பத்தில் கூறப்பட்டுள்ள ''தியானாஷ்டகம்'' என்னும் குரு ஸ்துதி மிகச் சிறப்பு வாய்ந்தது.

இந்த தியானாஷ்டகத்தை சந்தி காலங்களில் கிரமமாக தியானிப்பவர்கள் நற்கதியடைவர் என்று சத்தியம் செய்து கூறப்பட்டுள்ளது.

ஞானிகளின் ஒவ்வொரு வார்த்தையும் சத்தியமே, சத்தியமே. அதிலும் மிக அழுத்தமாக சத்தியம் செய்து சொல்லியிருப்பதால் அனைவரும் ஆத்மார்த்தமாக இந்த தியானாஷ்டகத்தை கிரமமாக தியானித்து ஆன்மானுபூதியை பெறுவோமாக.

**லெ. இசக்கிமுத்து**

அகஸ்தியர் அருளிய அடுக்குநிலை போதம்

# முன்னுரை

அண்டத்தில் உள்ளதே பிண்டத்திலும் உள்ளது. பிண்டத்தை யறிந்தால் அண்டத்தை அறியலாம் என்ற வேத வாக்கியப்படிக்கு கூறுவோமேயானால் அது (1) துவைத மென்றும் (2) அத்வைதமென்றும் இரண்டுவிதமாயிருக்கும்.

1. கருமகாண்டமென்றும், பக்திகாண்டமென்றும், யோக காண்டமென்றும், துவைத மார்க்கத்தில் உரைக்கும் வேதாந்த விளக்கங்களெல்லாம் மின்மினி விளக்க மென்றும், அற்ப சுருதி வாக்கியமென்றும் சொல்லப்படும். இதனை பூர்வபட்சமென்று மேலோர் உரைப்பர்.

துவைதமார்க்கத்திலேயுள்ள இம்மூன்று காண்டங் களிலும் அபிமானித்துக் கொண்டு ராக துவேசங்களினால் வருகிற காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மச்சரம், இரீஷை, டம்பம், தர்ப்பம், அகங்காரமென்று இவைகளை பொருந்தி இருவினைகள் புரிந்து நான்கர்த்தா, போக்த்தா, ஞாதாவென்று விவகாரப்பட்டு அபிமானித்தும் கடவுள் வேறு, நான் வேறு என்று பேதப்பட்டு விளங்குவதே துவைதமாகும்.

2. ஆத்மாவானது தானே எல்லாமாயும், எல்லாம் தானே யாயும் அத்வைத மார்க்கத்தில் உரைக்கும் வேதாந்த

விளக்கங்களெல்லாம் சூரியப் பிரகாச விளக்கமென்றும் பிறபல சுருதி வாக்கியமென்றும் சொல்லப்படும்இதனை உத்திரபட்சம் மென்று மேலோர் உரைப்பர்.

அத்வைத மார்க்கத்திலேயுள்ள ஞான காண்டத்தில் கூறியபடி நிர்குண உபாசனையினால் சத்துவ குணம் மேலிட்டு அதனால் இருவினையொப்பு மலபரிபாகம் வந்த காலத்து சாதன சதுட்டையம் கைகூடி, அதனால் குரு தரிசனம் உண்டாகி, அதனால் தத்துவ விசாரம் செய்து, அதனால் சாக்கிர, சொப்பன, சுழுத்தி அவஸ்தைகளும், அபிமானிகளும் நீங்கி, அதனால் விவேக அறிவு உண்டாகி, அதனால் இரண்டற்ற நிலையினை நனவினில் சுழுத்தியாக அனுபவப்படுவதே **அத்வைதமாகும்.**

இரண்டற்ற நிலையாய் இருக்கின்ற சுத்த சைதன்ய சொரூபமே சித்தாயும் நிர்விகாரமாயும், அகர்த்தாவாயும், அபோக்தாவாயும், விளங்குவதே சொரூபலட்சனமாகும்.

(உ.ம்)

மின்சாரமானது எந்த இயந்திரங்களில் சம்பந்தப்பட்டு விவகரிக்கப்பட்டாலும் மின்சாரம் விகாரப்படாமல் இருப்பது போல் சுத்த சைதன்ய சொரூபமே நிர்விகாரமாயும் உள்ளது.

அக்கினியானது விறகு கட்டையை எரித்து தன்மய மாக்கி சாம்பலாக்குமேயல்லாமல் அந்த அக்கினியினால் உண்டான அன்னபாணாதிகளை நான் சமைத்தேனென்ற கருத்தத்துவமும், சமைத்த உணவை உண்டு களிப்பேனென்ற போக்துருத்துவமும் அக்னிக்கு இல்லாததுபோல அத்வைத சொரூபமான சுத்த சைதன்யமானது நிர்விகாரமாயும், அகர்த்தாவாயும், அபோக்தாவாயும் விளங்குகிறது. அத்வைத அனுபவத்தையுடைய அகத்திய மாமுனிவர் அண்ட

பிண்டத்திலும் தான் கண்டு அனுபவித்ததை, எல்லோரும் அறிவைக் கொண்டு அறியாமல், அனுபவத்தால் அறிய வேண்டு மென்று அதனை கேள்விக்கணைகளாக அடுக்கி அருளியுள்ளார்.

நாமும் போதப்பட அவ்வழி சென்று விசாரித்து அறிந்து அனுபவமாக்கிட முயல்வோமாக.

**சாது ராஜேந்திர சுவாமிகள்**

# ஆசியுரை

**கே**ரள மாநிலம் பாலக்காடு இராமானந்தா ஆசிரமத்தில் இராமானந்த சுவாமிகள் இருந்த காலத்தில் வேதாந்த தத்துவ விசாரமும் சத்சங்கமும் தொடர்ந்து தமிழ்மொழியிலும் நடைபெற்று வந்தது. ஆசிரமத்தில் பயன்படுத்திய நூற்றுக் கணக்கான வேதாந்த நூல்கள் பழுதடைந்தும் காணாமலும் போய்விட்டது. இருக்கின்ற நூல்களில் முன், பின், நடுவில் பக்கங்கள் காணாமலும் நூறு வருடங்கள் பழமையானதால் தொட்ட இடத்தில் உடையும் தன்மையுமாய் இருந்த நிலையில்

**அநுகூல மாமுனிவர்** அருளிய
**பரமானந்த தீபம்** என்ற நூலும்,
மற்றும் **அகஸ்தியர்** அருளிய
**அடுக்குநிலை போதம்** என்ற நூலும்

இருந்தபடியால் இந்த இரண்டு நூல்களின் கருத்துக்கள் சுருக்கமாயும், ஆழமாயும் தத்துவரூபமாயுமுள்ளதை கருத்தில் கொண்டு வருங்கால ஆத்மசாதகர்களுக்கு இன்றியமையாதது என்றுணர்ந்து குருகுலம் கைவல்ய சுவாமிகள் சாது சங்கத்திலேவுள்ள சற்சீடரான சிவக்குமார் சுவாமிகள் இரண்டு நூல்களையும் மீள்பதிப்பு செய்து விலையில்லா புத்தகமாக வெளியிடுவதற்கு முன் வந்து முழு பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு பொருளதவி செய்துள்ளார் ஆத்மசாதகர்கள்

அனைவரும் இதனை கற்றுணர்ந்து உய்ய வேண்டும் என்ற பரந்த உள்ளம் கொண்ட சிவக்குமார்சுவாமிகளை மண்ணூரப்பா, பேரூர் அப்பா, கோனார் அப்பா, மடாதிபதி சொப்பிரகாச சுவாமிகள் அவர்களுடைய அனுக்கிரகமும் ஆசியும் எப்போதும் நிலைக்கட்டுமாக,

இவண்

**சிவபாலா சுவாமிகள்**

**சாது ராஜேந்திர சுவாமிகள்**

**சற்சீடர் லே. இசக்கிமுத்து**

✵

**கோ**வை பேரூர் அப்பா இராமானந்தா சுவாமிகளின் பிரதான சீடர்களில் சிவபாலா சுவாமிகள், சாது ராஜேந்திர சுவாமிகள், துணைவியர் அன்பு கலைவாணி அம்மா அவர்களாலும்,

மற்றும் திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் தாலுக்கா பள்ளக்கால் பொதுக்குடி குருகுலம் கைவல்ய சுவாமிகள் ஆசிரமம். வேதாந்த சிரோன்மணி ஞானசற்குரு ஸ்ரீலஸ்ரீ பெருமாளானந்த சுவாமிகளுடைய சற்சீடர்களில் ஒருவரான உயர்திரு லெ.இசக்கிமுத்து அவர்களாலும் இந்நூல் அச்சுப்பிழை திருத்தம் செய்யப்பட்டது பிழை இருப்பின் பெரியோர் பொருக்க வேண்டும்.

# சுவாமிகளின் சமாதியும் - அதைத் தொடர்ந்து சத்சங்கமும்

கேரளா மாநிலம் பாலக்காடு மாவட்டம் மண்ணூர் என்ற கிராமத்திலே, மகா மகத்துவம் பெற்று எழுந்தருளி அடியவர்கள் அல்லலறுத்து ஆனந்தநிலையினை காட்டும், தெட்சிணாமூர்த்தியாய் அமர்ந்து அருள்பாலிக்கின்ற ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள் 1955ஆம் ஆண்டு சுவாமிகளுடைய 90வது வயதில் சமாதி அடைந்தார்.

இராமானந்தா சுவாமிகளுடைய பிரதான சீடர் கோவை பேரூரிலே 1956ஆம் ஆண்டு ஆசிரமம் அமைத்து குருநாதருக்கு தன்னை அர்ப்பணித்து வாழ்ந்து காட்டிய பேரூர் அப்பா ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள் 1994 ஆம் ஆண்டு 90வது வயதில் பேரூர் ஆசிரமத்திலே சமாதி அடைந்தார்.

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திர வட்டம் பள்ளக்கால் பொதுக்குடி என்ற கிராமத்தில் வேதாந்த தத்துவங்களை கற்றுணர்ந்து குரு பரம்பரையில் வந்த கோனார் சுவாமிகள் என்கிற பெருமாளானந்த சுவாமிகள் ''குருகுலம் கைவல்ய சுவாமிகள் ஆசிரமம் நிருவி தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதம் என்ற நூலை பிரதானமாகக்கொண்டு சத்சங்கத்திலே உபதேசம் செய்து வந்தார்கள். சுவாமிகளும் 2009 ஆம் ஆண்டு 72 ஆம் வயதில்

சமாதி அடைந்தார்கள் பேரூர் அப்பா, கோனார் அப்பா உள்ள காலத்தில் உடனிருந்து குரு மகிமைகளையும், அஞ்ஞானம் சந்தேகம் விபரீதங்களை தத்துவவிசாரமாக கேட்டறிந் துள்ளதையும் தொடர்ந்து

கோவை தீத்திபாளையத்தில்

**குருகுலம் கைவல்ய சுவாமிகள் சாதுசங்கம்** என்ற அமைப்பிலும்.

**திருநெல்வேலி அம்பா சமுத்திரம் பள்ளக்கால் பொதுக்குடியில் குருகுலம் கைவல்ய சுவாமிகள் ஆசிரமம்** என்ற அமைப்பிலும்

தொடர்ந்து தத்துவஞான விசாரங்களை கலந்துரையாடி வருகிறோம்.

உரிமை : **தலைமை இராமானந்தா ஆசிரமம்**
கேரளா மாநிலம் பாலக்காடு மண்ணூர்
மடாதிபதி: சொப்பிரகாசசுவாமிகள்.
சுவாமிகளின் அனுமதியுடன்
பரமானந்த தீபம் மற்றும் அடுக்குநிலைபோதம்
என்ற இரண்டு நூல்களும் மீள் பதிப்பு செய்து
இராஜபாளைய மாநில மாநாட்டில்

விலையில்லா புத்தகமாக வெளியிடப்பட்டது.

**குருகுலம் கைவல்ய சுவாமிகள்**
**சாது சங்கம்**
2/195, கோல்டன் நகர்,
தீத்திபாளையம்
கோயம்புத்தூர் - 641 010
செல்: 98654 53023

**குருகுலம் கைவல்ய சுவாமிகள்**
**ஆசிரமம்**
பள்ளக்கால் பொதுக்குடி - 627 413
அம்பாசமுத்திரம் தாலுகா
திருநெல்வேலி மாவட்டம்
செல்: 98655 96655

# குரு வந்தனம்

**உ**லக முதற்பொருளை, உம்பர்க்கும் உணர்வரிதாம் பொருளை ஓதிய வேதாகமத்தின் உச்சியின் உட்பொருளை, பல கலையின் பொருள் முடிவின் முடிவான பொருளை, பற்றற பற்றிய பெரியோர் பரவியவான் பொருளை, அலைதிவலை, நுரை கடலில் உதித்து ஒடுங்குமாப்போல் அகிலாண்டம் உதித்தொடுங்கும் அதன் மூலப்பொருளை இலகிய சற்குருவாகியானாகும் பொருளை எங்குமாம் பரம்பொருளையாமும் வணங்குதுமே.

இருவிழிகள் உலகறிந்தும் தன்னை அறியாதது போல் யான் அறியும் பொருளை இங்கு எங்கள் அறியாமையினால் கருவிடை புக்கி இன்ப துன்பக் கடலிடையே சுழன்று கண் கலக்கப்படும் என்னை கருணை விழி யதனால் இருவினைகள் அறநோக்கி ஆணவமே போக்கி அகம்மகம் என்று இருந்த தெல்லாம் அறிவுகொண்டே நீக்கி பருவமதில் பதம்தாக்கி கற்பனைகள் யாவும் பாழாக்கி தானாக்கும் பரவுருவை பணிதல் செய்வாம்.

ஓம் தத் சத்

# தட்சிணா மூர்த்தி ஸ்தோத்தரம்

மௌனம் வியாக்கியா பிரகடித
  பர - பிரம்ம தத்வம் யுவானம்
வர்ஷிஷ்டாம் தேவசத் ரிஷிகணைஹி
  ஆவ்ருதம் பிரம்ம நிஷ்டை:
ஆச்சாரேந்தரம் கரகலித
  சின்முத்ர - மானந்த ரூபம்
ஸ்வாத்மா ராமம் முதித வதனம்
  தட்சிணாமூர்த்தி மீடே

## பொழிப்புரை

ஆலமரத்தடியில் கல்லின் மேல் தெற்கு முகமாக அமர்ந்து கொண்டிருப்பவராயும் தோற்றத்திலே மௌனம் அகத்திலே இயற்கையோடு இணைந்து உண்மையைக் குறிக்கும் பரபிரம்ம தத்துவமாயும், தத்துவங்களுக்கு அப்பாலாய் சொரூபமாக விளங்குகிறவராயும், எப்போதும் இளமையுடன் இருப்பவராயும், ரிஷிகளால் சூழப்பட்டு இருப்பவராயும் மனதிலே குருவை சிரத்தையாக யார் வர்ச்சிக்கிறார்களோ அவர்களை தன்மயமாக்குபவராயும், பிரம்ம நிஷ்டையை சொல்லாமல் சொல்பவராயும், எந்நேரமும் சச்சிதானந்தமாய் இருப்பவராயும், ஆசானுக்கு ஆசானாகியும், ருத்ராட்சமாலையும் கையில் சின்முத்திரையுடன் காட்சி அளிப்பவராயும், எப்போதும் மலர்ந்த முகத்தோடு ஆத்மானந்தத்தை புசித்துக் கொண்டிருப் பவராயும் இருக்கிற தட்சிணாமூர்த்தியை வணங்குவாம்.

உ

ஸ்ரீ சற்குருவே நமஃ

# த்யானாஷ்டகம்
## சுலோகம்

பரமானந்தம் பரமசுகிர்தம் கேவலம் க்யானமூர்த்தீம்
நிஸ்வாதீதம் ககனசதுர்ஸ்யம் தத்வமஸ்யாதி லக்ஷ்யம் 1

ஏகம் நித்யம் விமல மசலம் சர்வதா சாட்சிபூதம்
பாவாதீதம் த்ரிகுண ரஹிதம் ஸ்ரீ சற்குரும் நமாமி 2

தியானமூலம் குரோர்மூர்த்யம் பூசாமூலம் குரோர்ப்பதம்
மந்த்ரமூலம் குரோர்வாக்யம் முக்திமூலம் குரோர்கிருபா: 3

குருப்ரம்மா குரோர்விஷ்ணு குருதேவோ மஹேஸ்வரஃ

குருசாக்ஷாத் பரப்ரம்மம் தஸ்மை ஸ்ரீ குருவேநம: 4

மன்னாதோ ஸ்ரீ ஜகந்நாதோ மகத்குரும் ஸ்ரீ ஜகத்குரும்
மமாத்மா சர்வபூதாத்மா தஸ்மை ஸ்ரீ குருவேநம: 5

சைதன்யம் சாஸ்விதம் சாந்தம் வ்யோமாதீதம் நிரஞ்சனம்
நாதபிந்து களாதீதம் தஸ்மை ஸ்ரீ குருவேநமஃ 6

பிரம்ம விஷ்ணுஸ்ய ருத்ரஸ்ய ஈஸ்வரஸ்ய சதாசிவஃ
ஏகேகர்ப் பகதஹேய தஸ்மை ஸ்ரீ குருவேநமஃ 7

சர்வாத்மகம் ஸர்வஸமம் சச்சிதானந்த விக்ரஹம்
சர்வாதாரம் சர்வபூரணம் சதாநாராயணம் பஜே 8

இந்த த்யானாஷ்டகத்தை, சந்திகாலங்களில் கிரமமாகத் தியானிப்பவர்கள் சகல பகை, பழிபாவங்களினின்றும் நீங்கி, இகபரபோகபக்திசம்பன்னராய்ச்சுகித்திருப்பர்என்பதுசத்தியம்.

சுபம்

# குருஸ்துதி

**கலிவிருத்தம்**

தாயினு மிரங்கியென் றனைவந் தாண்டருள்
தூயவன் சரணமே சுமக்க வென்றலை
வாய்துதி செயக்கர மலர்க டூய்த்தொழ
நேயமோ டநுதின நினைக நெஞ்சமே

*

# ஆக்கியோன் பெயர் முதலியன

**எண்சீராசிரிய விருத்தம்**

சீர்பெருகுந் தீர்த்தபுரி நந்தி கேசன்
றிருக்கோயி னதிக்கடுத்த கீழ்ப்பாலாகப்
பார்பெருகு மாதவத்தைப் புரிந்து மேவும்
பரிவுடைய வநுகூல முனிவ னென்போ
னேர்பெருகுந் தமிழ்ப்பரமா னந்த தீப
மென்றுரைத்தா னிந்நூலை யோதி னோர்கள்
பேர்பெருகு சிவபெருமான் றாளைப் பற்றிப்
பேரின்ப வீடதனைப் பெறுவர் தாமே

*

ஸ்ரீ சிவ சற்குருவே நமః

# பரமானந்த தீபம்

## நேரிசை வெண்பா

தந்தைதா யாவானுஞ் சார்கதியிங் காவானு
மந்தமிலா வின்பநமக் காவானு - மெந்தனுயிர்
தானாகு வானுஞ் சரணாகு வானுமருட்
கோனாகு வானுங் குரு.

## எண் சீராசிரிய விருத்தம்

அஞ்செழுத்தி னுருவாகி யறிவு மாகி
யாதிநடு வீறாகி யநாதி யாகிச்
செஞ்சடையிற் கொன்றைதும்பை யணிந்தோ னாகித்
தேனாகிப் பாலாகி செகமே யாகி
மஞ்சுலவுங் குழலுமையோர் பாக னாகி
மகிழ்ச்சியுட னெனையாண்ட குருவு மாகி
வஞ்சமறத் தொழுமடியா ருளத்தின் மேவும்
வள்ளல்தனைப் புகழ்ந்தேத்தி வணங்கு வாமே. 1

மாலயனா யுருத்திரனாய் மகேச னாகி
மன்னுசதா சிவமாகி வானோ ராகிக்
காலமொரு மூன்றினுமாய் முனிவோ ராகிக்
ககனமுதற் பூதபௌ திகமு மாகிச்
சீலமுடன் றொழுமடியார்க் கெளியோ னாகித்
திரைகடலாய் மறைமுடிவாய்ச் சிறியேற் கன்பாய்
மேலுமருட் குருவடிவாய் வந்தாட் கொண்ட
மெய்ப்பொருளை யுளத்தில்வைத்துக் கருது வாமே. 2

எவ்வுயிரு மெப்பொருளும் படைத்த கோமா
னெங்குமொன்றாய் நின்றிலங்கு செம்பொற்சோதி
யிவ்வுலகி லன்புடனே யர்ச்சித் தேத்து
மெளியோர்க ளனுதினமுங் கருதிச் செய்த
பவ்வமெலாம் பற்றறுக்குங் கருணைக் கண்ணன்
பார்ப்பதியோர் பாகம்வைத்த வேதநாதன்
திவ்வியபொற் றாளிரண்டுங் கருத்தில் நோக்கித்
தினந்தினமுந் துதித்திறைஞ்சிப் போற்று வாமே. 3

எல்லார்க்கும் பரமசிவன் துணையா மாகில்
எவ்வுயிர்க்கு மவனருள்சேர்ந் திருக்கு மென்றே
பொல்லார்க்கு மியற்கைகெடப் புரிந்தி டாமற்
பொறிவழியில் மனம்பொருந்திச் சுழன்றி டாமல்
நல்லார்க்கும் பெரியவர்க்கு மெளியோ ருக்கும்
நாடோறு மிரக்கமுண்டாய் நடப்பா யாகில்
பல்லோர்க்கு முயிர்க்குயிரா யிருக்கு மெங்கோன்
பரிவினொடு கருணையருள் பாலிப் பானே. 4

புலைகளொடு கொலைகளவு கட்கா மத்தைப்
புந்திதனிற் கருதாமல் நிற்பா யாகில்
மலைமகளோர் பாகனுந்தன் வசமாய் நிற்பான்
மாதவமு நிலைக்குமிந்த வழிநில் லார்க்கு
அலைகடலிற் றுரும்பதுபோல் மனந்தள் ளாடும்
அறிவுதனக் கானிவரு மதுவல் லாமல்
நிலைதவறு மெழுபிறப்பும் நீங்கா தென்றே
நீணிலத்தி லருமறைக ளோது மாறே. 5

ஆணவகா மியமாயை மலமோர் மூன்று
மடுத்தறிவைக் கெடுக்குமதை யடுக்கப் போமோ
சாணளவுக் கேறிவந்தால் முழத்துக் கப்பால்
தாழ்த்திவிட்டுத் தனக்காளாய்ப் படுத்திக் கொள்ளும்
வாணிபர்செய் தொழிலதுபோல் கருத்தால் நோக்கி
மலமூன்றும் பொசிப்பறவே நிற்பா யாகில்
ஆணவமும் மலமகலும் பரமா னந்த
வமுதருந்தி வாழ்ந்துசுகித் திருக்க லாமே. 6

தன்னரசு நாடுவிட்டுக் காடு பாய்ந்து
தனித்தொன்றிப் பசுவாகிப் பாசத் தாலே
பொன்னைமண்ணைப் பெண்ணைநிதந் தேடித்தேடிப்
பொய்யுடலுக் கின்பதுன்பம் வேண்டி வேண்டி
மின்னனையார் கொங்கையைக்கண் டேங்கித் தூங்கி
விருப்புவெறுப் புற்றழிந்து விரகால் வெந்தே
தன்னுடைய பதியறியத் திறமில் லாமல்
தயங்கினர்க ளெண்ணிறந்த கோடி யாமே. 7

முந்நாளிற் றன்னைமறந் திச்சைக் காளாய்
மூலத்தி லாங்கார வடிவாய்த் தோன்றி
எந்நாளுந் திகைப்பூடு மிதித்தாற் போல
என்னதென்று மியானென்று மிழிவுற் றேங்கித்
தன்னாலே தான்கெட்டால் மன்று ளாடுந்
தம்பிரா னென்செய்வா னவன்பொற் றாளைப்
பந்நாளும் பூசித்தால் குருவாய்த் தோன்றிப்
பக்குவத்தில் தன்னையறி விப்பா னென்றே. 8

தொட்டிடமும் விட்டிடமுஞ் சொல்லிக் காட்டித்
தோற்றமொடுக் கம்மிரண்டும் விரித்துக் கூட்டிச்
சிட்டரிட பக்குவத்தைச் சுற்றிப் பார்த்துத்
திருவருளைக் கொடுக்கவல்லோ னாசா னாகும்
இட்டதொரு கட்டளைக்குப் பதில்சொல் லாம
லின்பதுன்ப மிரண்டினுக்கு மிடங்கொ டாமற்
சட்டமுடன் விட்டிடத்தில் நிட்டை யோகஞ்
சாதிக்கு முத்தமர்கள் சிட்ட ராமே. 9

என்னதென்றும் யானென்றும் விருப்புற் றென்று
மென்னுடலம் பருத்ததென்று மிளைத்த தென்றும்
தன்னுடலைத் தானென்று மதிக்கை யாலே
தன்மகன்ம மிருவினையுந் துணிவாய்த் தேடிப்
பின்னுமுட லெடுப்பதற்கே கர்த்தா வாகிப்
பிறவிவிடாய் கொண்டுழன்ற நெஞ்சே கேளாய்
நின்னுடலைப் பகுத்தறிந்து வேறாய்க் கண்டு
நின்ன றிவைத் தானாக நேசிப் பாயே. 10

அன்னை தந்தை துணைவர்சுற்றம் பெண்டீர் மக்க
ளச்சுமட்டம் தொட்டிமுத்த மாடு மாடு
நன்னிதியங் கன்னலுடன் செந்நெற் கெல்லாம்
நானெனதென் றலக்கணுற்றுக் கவலைக் காளாய்
என்னசென்ம மெடுத்தலுத்தாய் நெஞ்சே கேளாய்
இனியேனுஞ் சுருதியுக்தி நெறியூ டொன்றித்
தன்னையின்னா ரென்றறிந்தே யநுபோ கித்தால்
சம்சாரத் துக்கமெல்லாம் வெளியாங் காணே 11

முத்திபெறும் வழியாதோ யானா ரெந்தன்
மூடபவந் தொலையும்வகை யாதோ வென்று
பத்தியுட னருட்குருவின் சந்நி தானம்
பணிவிடைசெய் தொழுக்கமுண்டாய் விசாரித் தன்பாய்
உய்த்துணர்ந்து நடுவணையிற் கணப்போ தேனு
முற்றுளக்கண் மாறாமற் பார்த்தா யானாற்
சத்தொடுசித் தானந்த வடிவா யெங்குந்
தானாகி நின்றபதம் பெறுவர் தாமே. 12

ஆவியுடற் பொருள்மூன்றுந் தத்த மென்றே
யருட்குருவின் சந்நிதியிற் சித்த மாக
மேவியளித் தறிவுண்மைப் பொருளைப் பற்றி
மெய்த்தவத்தின் மிக்கோராய் நிற்கு நல்லோர்
பாவையரோ டில்லறத்தில் வாழ்ந்திட் டாலும்
பரிவினொடுந் துறவறத்தோ டிருந்திட் டாலும்
பூவுலகி லொட்டியுமொட் டாமல் வேறாய்ப்
புளியோடு பழம்போலொத் திருப்பர் தாமே. 13

சாதனமாஞ் சதுஷ்டயத்தின் விசாரத் தாலே
சந்தேக முள்ளதெல்லாந் தவறிப் போகும்
பேதமறப் பிரமமொன்றே நித்ய மென்றும்
பிரபஞ்ச மநித்யமென்று மறிந்தா யானால்
ஆதரவாய்ப் பரோக்ஷமென்ப ததுவே யாகும்
அபரோக்ஷ ஞானமென்ப தியாதோ வென்றாற்
காதலுடன் சொல்லாமற் சொல்லிக் காட்டுங்
காரணதே சிகனருளாற் பெறுவர் தாமே. 14

ஒன்றாகி யொன்றினுக்குண் மூன்றுண் டாகி
ஒருமூன்றுக் கிருமூன்றா யதிலொன் றுக்குள்
விண்ணாகி யொன்றிலொன்றா யைந்துண் டாகி
விரிந்தவைந்தி லொன்றொன்றுக் கைந்தைந் தாகிப்
பெண்ணாகி யாணாகி நானா வாகிப்
பிரிந்துலகீ ரேழாகிப் பிரமாண்ட மாகி
மண்ணாகி மண்ணொடைந்து மாறு மூன்றும்
வந்தவழி யேயொடுங்கி யொன்றங் காணே. 15

ஆவரணம் விக்ஷேப மவஸ்தை மாயை
யவைநான்கு முக்குணத்திற் செனித்த தாகும்
ஆவரண விக்ஷேப மவஸ்தை மாயை
யவைநான்கின் காரியங்கள் யாதோ வென்னில்
ஆவரண விக்ஷேப மவஸ்தை மாயை
யவைநான்கிற் சிவசீவன் செகத்துண் டாச்சு
ஆவரண விக்ஷேப மவஸ்தை மாயை
யவைநான்கு மிச்சையற்றோர்க் கில்லை தானே 16

இச்சையற்றோர்க் கின்பமில்லை துன்ப மில்லை
யிருவினையோ டிரவுமில்லை பகலுமில்லை
குட்சிதனக் கிரைதேடித் திரிவ தில்லை
குறைவுமில்லை நிறைவுமில்லை குலமோ யில்லை
சட்சமய வாதமில்லை பேதமில்லை
சங்கற்ப விகற்பமில்லை தானே தானாய்
அச்சமறச் சுகித்திருக்குஞ் சிசுவைப் போல
ஆனந்த விளையாட்டோ டிருப்பர் தாமே. 17

துவக்கமுத லெழுதாதும் வாதித் தோங்கித்
தொல்லைவினைக் கீடாகித் தோற்றுங் காயங்
கவைக்குதவி யற்றபுழு மேச்சற் கூடாங்
கஸ்தியுறு மலமூத்ரக் கடமென் றெண்ணித்
தவத்துடையோ ருடல்தளர்ந்து நழுவா முன்னந்
தன்னுடலைப் பகுத்தறிவாற் றள்ளி யேறிப்
பவக்கடலைக் கடப்பதன்றிப் பிறந்தா ராகிப்
பவக்கடலிற் படிவர்களோ படிந்தி டாரே. 18

சொற்பனத்தில் மலடிபிள்ளை பெற்றாற் போலுஞ்
சோரனென்று கட்டையைக்கண் டொளித்தாற் போலும்
சர்ப்பமென்று பழுதையைக்கண் டயர்ந்தாற் போலுஞ்
சடத்தைமெய்யென் றறிவிழந்தோர் பிறந்தா ராகுஞ்
சொற்பனங்கண் டெழுந்துபொய்யென் றறிந்தாற் போலுஞ்
சோரனென்றோன் கட்டையிதென் றறிந்தாற் போலுஞ்
சர்ப்பமென்றோன் பழுதையிதென்றறிந்தாற் போலுஞ்
சடத்தைமித்தை யென்றறிந்தோன் ஞானியாமே. 19

ஆறாறு தத்துவத்தின் வகையே தென்றா
லாக்கையெனுந் தூலமதி லிருமூன் றாகும்
ஈறாறு சூக்குமத்தி லிருப தாகு
மிசையான காரணத்துக் கோரைந் தாகுங்
கூறாறும் பூதமைந்துங் கூடக் கூட்டிக்
குலவுசிவ தத்துவமென் றோது நூல்கள்
வீறாறு தத்துவங்கள் முப்பத் தாறும்
வேறாகக் கண்டறிவே சாட்சி யாமே. 20

மண்ணிடத்திற் றோன் றுகின்ற கடத்தை நீக்கி
மண்ணென்று மதித்தறியில் மண்ணே யாம்போற்
றண்ணீரிற் றோன்றுகின்ற குமிழி தன்னைத்
தண்ணீராய் மதித்தறியில் தண்ணீ ராகும்
பொன்னிடத்திற் றோன்றுகின்ற வுடைமை தன்னைப்
பொன்னென்று மதித்தறியிற் பொன்னே யாம்போற்
றன்னிடத்திற் றோன்றுகின்ற சடத்தை நீக்கித்
தானென்ன வுணர்வறிவே சாட்சியாமே. 21

அஸ்தியுடன் மாமிசந்தோல் நரம்பு ரோம
மைந்துமுனக் கன்னியமா யிருக்கை யாலே
அஸ்தியுடன் மாமிசந்தோல் நரம்பு ரோம
மைந்துமுதற் பிரிதிவியின் கூற தாகும்
அஸ்தியுடன் மாமிசந்தோல் நரம்பு ரோம
மைந்துவிதம் நீயறிவா யவைநீ யல்ல
அஸ்தியுடன் மாமிசந்தோல் நரம்பு ரோம
மைந்திற்கு முயர்சாட்சி நீயாங் காணே. 22

மூத்திரம்வாய் நீர்வேர்வை வுதிரம் விந்து
முதலைந்து மன்னியமா யிருக்கை யாலே
மூத்திரம்வாய் நீர்வேர்வை வுதிரம் விந்து
முதலைந்துஞ் சலத்தினிட கூற தாகும்
மூத்திரம்வாய் நீர்வேர்வை வுதிரம் விந்து
முதலைந்தும் நீயறிவா யவைநீ யல்ல
மூத்திரம்வாய் நீர்வேர்வை வுதிரம் விந்து
முதலைந்துக் குயர்சாட்சி நீயாங் காணே 23

பசிதாக நித்திரைமை துனஞ்சோம்ப லைந்தும்
பகுத்தறியி லன்னியமா யிருக்கை யாலே
பசிதாக நித்திரைமை துனஞ்சோம்ப லைந்தும்
பகுத்தறியி னக்கினியின் கூற தாகும்
பசிதாக நித்திரைமை துனஞ்சோம்ப லைந்தும்
பகுத்தறியில் நீயறிவா யவைநீ யல்ல
பசிதாக நித்திரைமை துனஞ்சோம்ப லைந்தும்
பகுத்தறியி லுயர்சாட்சி நீயாங் காணே. 24

ஓடலிருந் திடல்நடத்தல் படுத்தல் தாண்ட
லோரைந்து மன்னியமா யிருக்கை யாலே
ஓடலிருந் திடல்நடத்தல் படுத்தல் தாண்ட
லோரைந்து மாருதத்தின் கூற தாகும்
ஓடலிருந் திடல்நடத்தல் படுத்தல் தாண்ட
லோரைந்தும் நீயறிவா யவைநீ யல்ல
ஓடலிருந் திடல்நடத்தல் படுத்தல் தாண்ட
லோரைந்துக் குயர்சாட்சி நீயாங் காணே. 25

இராகமொடு மோகவெட்கம் பயந்து வேஷ
மிவையைந்து மன்னியமா யிருக்கை யாலே
இராகமொடு மோகவெட்கம் பயந்து வேஷ
மிவையைந்துங் ககனத்தின் கூற தாகும்
இராகமொடு மோகவெட்கம் பயந்து வேஷ
மிவையைந்தும் நீயறிவா யவைநீ யல்ல
இராகமொடு மோகவெட்கம் பயந்து வேஷ
மிவையைந்துக் குயர்சாட்சி நீயாங் காணே 26

தசைநரம்பு துவக்குமயி ரெலும்பு வாய்நீர்
தன்னொடுசுக் கிலங்குருதி சிறுநீர் வேர்வை
பசிதாக மைதுனங்கண் ணுறக்கஞ் சோம்பல்
படுத்தலிருந் திடல்நடத்த லோடல் தாண்டல்
திசைபுகழி ராகமச்சம் மோக வெட்கந்
துவேஷபய மிவ்வகைக ளிருபத் தைந்தும்
இசைபெறுமைம் பூதபஞ்சீ கரண தூல
மென்னுமுட லன்னமய கோசங் காணே 27

அன்னமய மென்பதுவே தூல தேக
மாகுமினிப் பிராணமய மனோம யத்தோ
டுன்னிவிஞ் ஞானமயத் துடனிம் மூன்று
முற்றதொரு சூக்கும சரீர மாகும்
பின்னுமா னந்தமய கோச மென்றும்
பெருகியகா ரணதேக மென்பர் மேலோர்
பன்னரிய வுடல்மூன்றுங் கோச மைந்தும்
பகுத்தறியு முயர்சாட்சி நீயாங் காணே. 28

காரணசூக் குமதூல தேக மூன்றுங்
கண்டறியி லன்னியமா யிருக்கை யாலே
காரணசூக் குமதூல தேக மூன்றுங்
கண்டறியி லைங்கோச பாச மாகுங்
காரணசூக் குமதூல தேக மூன்றுங்
கண்டறியில் நீயறிவா யவைநீ யல்ல
காரணசூக் குமதூல தேக மூன்றுங்
கண்டறியி லுயர்சாட்சி நீயாங் காணே 29

கோசமைந்து மொவ்வொன்றாய்ப் பிரித்து வேறாய்க்
குறித்தறியி லன்னியமா யிருக்கை யாலே
கோசமைந்து மொவ்வொன்றாய்ப் பிரித்து வேறாய்க்
குறித்தறியிற் பூதமைந்தின் கூற தாகும்
கோசமைந்து மொவ்வொன்றாய்ப் பிரித்து வேறாய்க்
குறித்தறியில் நீயறிவா யவைநீ யல்ல
கோசமைந்து மொவ்வொன்றாய்ப் பிரித்து வேறாய்க்
குறித்தறியி லுயர்சாட்சி நீயாங் காணே. 30

ஞாதுருவி னொடுதோத்ரஞ் சமானன் வாக்கு
நான்குமுனக் கன்னியமா யிருக்கை யாலே
ஞாதுருவி னொடுதோத்ரஞ் சமானன் வாக்கு
நான்குமுதற் சத்தமதின் குணம தாகுஞ்
ஞாதுருவி னொடுதோத்ரஞ் சமானன் வாக்கு
நான்குமுதல் நீயறிவா யவைநீ யல்ல
ஞாதுருவி னொடுதோத்ரஞ் சமானன் வாக்கு
நான்கினுக்கு முயர்சாட்சி நீயாங் காணே. 31

மனதுதொக்கு வியானனுடன் பாணி நான்கும்
மதித்தறியி லன்னியமா யிருக்கை யாலே
மனதுதொக்கு வியானனுடன் பாணி நான்கும்
மதித்தறியிற் பரிசமதின் குணம தாகும்
மனதுதொக்கு வியானனுடன் பாணி நான்கும்
மதித்தறியில் நீயறிவா யவைநீ யல்ல
மனதுதொக்கு வியானனுடன் பாணி நான்கும்
மதித்தறியி லுயர்சாட்சி நீயாங் காணே 32

புத்திசட்சு வுதானனுடன் பாத நான்கும்
புகன்றறியி லந்நியமா யிருக்கை யாலே
புத்திசட்சு வுதானனுடன் பாத நான்கும்
புகன்றறியில் ரூபமதின் குணம தாகும்
புத்திசட்சு வுதானனுடன் பாத நான்கும்
புகன்றறியில் நீயறிவா யவைநீ யல்ல
புத்திசட்சு வுதானனுடன் பாத நான்கும்
புகன்றறியி லுயர்சாட்சி நீயாங் காணே. 33

சித்தமொடு சிங்குவைய பானன் குய்யஞ்
செறிநான்கு மன்னியமா யிருக்கை யாலே
சித்தமொடு சிங்குவைய பானன் குய்யஞ்
செறிநான்கு மிரசமதின் குணமதாகுஞ்
சித்தமொடு சிங்குவைய பானன் குய்யஞ்
செறிநான்கும் நீயறிவா யவைநீ யல்ல
சித்தமொடு சிங்குவைய பானன் குய்யஞ்
செறிநான்குக் குயர்சாட்சி நீயாங் காணே. 34

ஆங்கார மாக்ராணங் குதம் பிராண
னைவநான்கு மன்னியமா யிருக்கை யாலே
ஆங்கார மாக்ராணங் குதம் பிராண
னைவநான்குங் கந்தமதின் குணம தாகும்
ஆங்கார மாக்ராணங் குதம் பிராண
னைவநான்கும் நீயறிவா யவைநீ யல்ல
ஆங்கார மாக்ராணங் குதம் பிராண
னைவநான்குக் குயர்சாட்சி நீயாங் காணே 35

தோத்திரஞா துருசமானன் வியானன் வாக்கு
    தொக்குமனம் புத்திசட்சு வுதானன் பாணி
தேற்றுசித்த மாங்கார மபானன் பாதஞ்
    சிங்குவையாக் கிராணகுதம் பிராணன் குய்யஞ்
சாற்றுமிவை ஐந்நான்கும் யாதோ வென்னிற்
    றன்மாத்திர பஞ்சீகிருத குணம தாகும்
ஏற்றபஞ் சீகிருத சூக்கும பூத
    மெனுமுடலுக் குயர்சாட்சி நீயாங் காணே 36

செவியுடம்பு கண்மூக்கு நாக்கு தாழ்வாய்
    சென்னிகழுத் துதடுகன்னஞ் சிறுநீர் தாரை
குவிமுலைமார் பிடைதுடைதோள் வயிறு கைகால்
    குண்டிதொப்பூழ் தசைநரம்போ டென்பு ரோமம்
இவைமுதற்கொண் டென்னதென்றே தன்ன தாக
    வியம்பிலுனக் கன்னியமா யிருக்கை யாலே
இவையனைத்துந் தானல்ல சடமா மென்றே
    யிசைந்தறியி லுயர்சாட்சி நீயாங் காணே. 37

என்னுடைமை யென்பூமி யென்வே ளாண்மை
    யென்வீடு யென்வாச லென்றாற் போலும்
என்னுடைய மனம்புத்தி யென்னாங் கார
    மென்னுடல மென்பிராண னென்றாற் போலும்
உன்னுடைய காரியமா யிருக்கை யாலே
    வுன்னையின்னா ரென்றறியா தவைநீ யல்ல
உன்னுடைய காரியங்க ளனைத்தும் வேறா
    யுய்த்தறியி லுயர்சாட்சி நீயாங் காணே. 38

தேகாதி பிரபஞ்ச நாம ரூபந்
தேர்ந்தறியி லன்னியமா யிருக்கை யாலே
தேகாதி பிரபஞ்ச நாம ரூபந்
தேர்ந்தறியில் பூதமைந்தின் கூற தாகுந்
தேகாதி பிரபஞ்ச நாம ரூபந்
தேர்ந்தறியில் நீயறிவா யவைநீ யல்ல
தேகாதி பிரபஞ்ச நாம ரூபந்
தேர்ந்தறியி லுயர்சாட்சி நீயாங் காணே. 39

அணுத்திரண காஷ்டமுத லண்ட பிண்ட
மகண்டமெங்கு மன்னியமா யிருக்கை யாலே
அணுத்திரண காஷ்டமுத லண்ட பிண்ட
மகண்டமெங்கும் பூதமைந்தின் கூற தாகும்
அணுத்திரண காஷ்டமுத லண்ட பிண்ட
மகண்டமெங்கு நீயறிவா யவைநீ யல்ல
அணுத்திரண காஷ்டமுத லண்ட பிண்ட
மகண்டமெங்கு முயர்சாட்சி நீயாங் காணே. 40

பிரிதீவப் புடன்தேயு வாய்வா காசம்
பிரிவைந்து மன்னியமா யிருக்கை யாலே
பிரிதீவப் புடன்தேயு வாய்வா காசம்
பிரிவைந்தும் விக்ஷேப சக்தி யாகும்
பிரிதீவப் புடன்தேயு வாய்வா காசம்
பிரிவைந்தும் நீயறிவா யவைநீ யல்ல
பிரிதீவப் புடன்தேயு வாய்வா காசம்
பிரிவைந்துக் குயர்சாட்சி நீயாங் காணே. 41

சத்தபரி சம்ரூப ரசமுங் கந்தந்
தானைந்து மன்னியமா யிருக்கை யாலே
சத்தபரி சம்ரூப ரசமுங் கந்தந்
தானைந்தும் விக்ஷேப சத்தி யாகுஞ்
சத்தபரி சம்ரூப ரசமுங் கந்தந்
தானைந்தும் நீயறிவா யவைநீ யல்ல
சத்தபரி சம்ரூப ரசமுங் கந்தந்
தானைந்துக் குயர்சாட்சி நீயாங் காணே. 42

சாக்கிரசொற் பனசுழுத்தி யவஸ்தை மூன்றுஞ்
சார்ந்தறியி லன்னியமா யிருக்கை யாலே
சாக்கிரசொற் பனசுழுத்தி யவஸ்தை மூன்றுஞ்
சார்ந்தறியில் விக்ஷேப சத்தி யாகும்
சாக்கிரசொற் பனசுழுத்தி யவஸ்தை மூன்றுஞ்
சார்ந்தறியில் நீயறிவா யவைநீ யல்ல
சாக்கிரசொற் பனசுழுத்தி யவஸ்தை மூன்றுஞ்
சார்ந்தறியி லுயர்சாட்சி நீயாங் காணே. 43

ஆறாறு தத்துவமும் பெருக்கிப் பார்க்கி
லவையனைத்தும் பிரமாண்ட மாகி நிற்கும்
பூறான பிரமாண்ட மதனைப் பார்க்கிற்
பூதமைந்துக் குள்ளாகி யொடுங்கிப் போகும்
வாறான பூதமைந்துஞ் சுருக்கிப் பார்க்கில்
வலிதான விக்ஷேபத் தொடுங்கிப் போகும்
வேறான விக்ஷேப சக்தி தானும்
விபுவான பிரமத்தோ டொன்றிப் போமே 44

தானாகி நின்றிலங்கு மொன்றுக் குள்ளே
சராசரமெ லாந்தோன்றி யொடுங்கிப் போகும்
தானாகி நின்றிலங்கு மொன்றை விட்டாற்
சார்மனத்து வந்தவற்றைத் தள்ள மாட்டாய்
தானாகி நின்றிலங்கு மொன்றாம் மோன
சற்குருவின் சந்நிதியிற் காத்தா யானால்
தானாகி நின்றிலங்கு மொன்றோ டொன்றி
தற்சாட்சித் தானாகி வாழ லாமே. 45

பத்திலட்சங் கோடிநந்நூ லாய்ந்தா லென்ன
பாரனைத்தும் வலம்புரியாய்ச் சூழ்ந்தா லென்ன
அத்தைவிட் டித்தைக்கைக் கொள்ளென் றாற்போ
லாரணத்துட் பொருளையலோ வறிய வேணுந்
தத்துவத்தை நித்தநித்தம் பற்றிப் பார்த்துத்
தன்னையின்னா றென்றறிந்து பற்று நீங்கி
அத்துவிதந் தானாகி நிற்பா யாகி
லழியாத பேரின்பம் பெருகுந் தானே. 46

மந்திரங்காற் பங்குமதி முக்காற் பங்கும்
வந்தடுத்தால் மாதவத்தோர் தங்கட் கெல்லாஞ்
சந்திரனுஞ் சூரியனும் நேரிட் டாப்போல்
தற்சொருபப் பிரகாசம் வெளியாய்த் தோன்றும்
எந்திரங்க ளெழுதிவைத்துப் பூசித் தென்ன
வெண்ணரிய நூல்கள்முற்றும் வாசித் தென்ன
தந்திரத்தாற் றன்னைநன்றா யறிய வேணுந்
தனையறிந்தாற் றலைவனையு மறிய லாமே 47

நாடறிந்த பார்ப்பார்க்குப் பூணு நூல்கள்
நடுமார்பி லிருந்தென் னிராதே லென்ன
வீடறிந்த பார்ப்பார்க்குத் திருவே டங்கள்
மேனிதனி லிருந்தாலென் னிராமற் போயென்
பாடறிந்து பாடுபட்டாற் பலனுண் டாகும்
பாடறியார் தங்களுக்கே கேடென் றாற்போற்
கூடறிந்து குடியிருந்தே சுகித்தோர்க் கெல்லாங்
கூற்றன்வந்து பிடித்தடித்துக் கொல்லா னன்றே 48

இல்லாத மாயைதனை யுண்டென் றெண்ணி
யிருவினையைப் புரிந்தவந்த நெறியே நின்று
செல்லாத காசதுபோல் நானா பேதச்
செனனவா ரிதியிலுழன் றலைவ தெல்லாம்
பொல்லாத மனத்தினிட செயலென் றெண்ணிப்
பொருந்தறியார்க் கிப்புவியிற் பலனே தென்றாற்
கல்லான நெஞ்சுடைய நமன்கை பட்டுக்
கலங்குவதே கைகண்ட பலனா மென்றே. 49

இச்சைக்கு வித்தான மனதைப் பற்றி
யிழுத்துவந்து மூலத்தில் நிறுத்திக் கொண்டு
எச்சரிக்கை யாகநித்தம் லயிக்கப் பாரு
யெண்ணிறந்த கன்மமெல்லாம் வெண்ணீ றாகும்
நிச்சயித்துப் பாராம லுண்டித் தீயால்
நீணிலத்திற் பாஷாண்டி வேஷம் பூண்டு
பிச்சையெடுத் துண்டாலும் பிறப்பு போமோ
பிச்சையிட் டோர்க் கருள்வீடு பெருகுந் தானே 50

ஆங்காரப் புனத்தைவெட்டிச் சுட்டு நீற்றி
யாட்கொண்ட குருபதத்தை நிதமும் போற்றி
நீங்காமல் நாசிநுனி நடுவில் நோக்கி
நிட்டைபுரிந் தறிவுருவாய் நிற்பா யாகில்
தேங்காத வானந்த வெள்ளந் தேங்குந்
தெள்ளமுத முண்டாற்போ லுள்ளம் பொங்குந்
தீங்கான பிறவிவிடா யுடனே நீங்குஞ்
சித்தமென்று நூற்பலவுஞ் செப்புந் தானே. 51

உடல்பொருளா வியுமுடனே தன்ன தாக
வுகந்தடிமை கொண்டபிரான் றாளைப் போற்றி
அடைவுடனே மெய்ஞ்ஞான நூற்க ளாய்ந்து
வறியபர மானந்த தீப மென்றே
திடமுறவே யுரைத்ததமி ழைம்பத் தொன்றுந்
தினந்தோறுங் கற்றுணர்ந்து விசாரித் தோர்கள்
மடமையெனும் பசுபாச வறிவு நீங்கி
மன்னுபதி யொடுங்கூடி வாழ்வர் தாமே. 52

தூலவுட னீயல்ல வென்று போனாற்
றொந்தசட் பாவகவி காரங்க ளேது
தூலவுட னீயல்ல வென்று போனாற்
றொந்தமாம் மானாபி மான மேது
தூலவுட னீயல்ல வென்று போனாற்
றொந்தகுல கோத்திரவ னாதி யேது
தூலவுட னீயல்ல வென்று போனாற்
றொந்தாதிக் குயர்சாட்சி நீயாங் காணே. 53

சமட்டியாந் தூலசரீ ரத்தை நன்றாய்ச்
சார்ந்தறியி லன்னியமா யிருக்கை யாலே
சமட்டியாந் தூலசரீ ரத்தை நன்றாய்ச்
சார்ந்தறியி லீன்றதுவே பஞ்ச பூதஞ்
சமட்டியாந் தூலசரீ ரத்தை நன்றாய்ச்
சார்ந்தறியில் நீயறிவா யதுநீ யல்ல
சமட்டியாந் தூலசரீ ரத்தை நன்றாய்ச்
சார்ந்தறியு முயர்சாட்சி நீயாங் காணே. 54

சூக்மவுட நீயல்ல வென்று போனாற்
றொந்தபலா பலபசியா திகடா னேது
சூக்மவுட நீயல்ல வென்று போனாற்
றொந்தமாஞ் சத்தவச னாதி யேது
சூக்மவுட நீயல்ல வென்று போனாற்
றொந்தமாஞ் சல்லியா காதி யேது
சூக்மவுட நீயல்ல வென்று போனாற்
றொந்தங்கட் குயர்சாட்சி நீயாங் காணே.. 55

சர்வவிந் திரியகர ணம்பி ராணன்
சார்ந்தறியி லன்னியமா யிருக்கை யாலே
சர்வவிந் திரியகர ணம்பி ராணன்
சார்ந்தறியின் மாத்திரையே யீன்ற தாகுஞ்
சர்வவிந் திரியகர ணம்பி ராணன்
சார்ந்தறியில் நீயறிவா யதுநீ யல்ல
சர்வவிந் திரியகர ணம்பி ராணன்
சார்ந்தறியு முயர்சாட்சி நீயாங் காணே. 56

சமட்டியாஞ் சூக்கும சரீரந் தன்னைச்
சார்ந்தறியி லன்னியமா யிருக்கை யாலே
சமட்டியாஞ் சூக்கும சரீரந் தன்னைச்
சார்ந்தறியி லீன்றதுவே சூக்ம பூதஞ்
சமட்டியாஞ் சூக்கும சரீரந் தன்னைச்
சார்ந்தறியில் நீயறிவா யதுநீ யல்ல
சமட்டியாஞ் சூக்கும சரீரந் தன்னைச்
சார்ந்தறியு முயர்சாட்சி நீயாங் காணே. 57

மூலவுட னீயல்ல வென்று போனால்
முரண்மேவு மறிவறியா மைகடா னேது
மூலவுட னீயல்ல வென்று போனால்
முரண்பிரிய மோதபிர மோத மேது
மூலவுட னீயல்ல வென்று போனால்
முரண்மூட சடசூனி யன்றா மேது
மூலவுட னீயல்ல வென்று போனால்
முரணாதிக் குயர்சாக்ஷி நீயாங் காணே. 58

சமட்டிகா ரணசரீ ரத்தை நன்றாய்ச்
சார்ந்தறியி லன்னியமா யிருக்கை யாலே
சமட்டிகா ரணசரீ ரத்தை நன்றாய்ச்
சார்ந்தறியில் விக்ஷேப மீன்ற தாகுஞ்
சமட்டிகா ரணசரீ ரத்தை நன்றாய்ச்
சார்ந்தறியில் நீயறிவா யதுநீ யல்ல
சமட்டிகா ரணசரீ ரத்தை நன்றாய்ச்
சார்ந்தறியு முயர்சாட்சி நீயாங் காணே. 59

விசுவதைச் சதபிராக் ஞனையே நன்றாய்
விசாரிக்கி லன்நியமா யிருக்கை யாலே
விசுவதைச் சதபிராக் ஞனையே நன்றாய்
விசாரிக்கி லிராசதத்திற் செனித்த தாகும்
விசுவதைச் சதபிராக் ஞனையே நன்றாய்
விசாரிக்கில் நீயறிவா யதுநீ யல்ல
விசுவதைச் சதபிராக் ஞனையே நன்றாய்
விசாரிக்கி லுயர்சாட்சி நீயாங் காணே 60

இவ்வுடல்க ளவத்தையபி மானி யாதி
யிவையன்றேற் புண்ணியபா வாதி யில்லை
இவ்வுடல்க ளவத்தையபி மானி யாதி
யிவையன்றேற் சுவர்க்கநர காதி யில்லை
இவ்வுடல்க ளவத்தையபி மானி யாதி
யிவையன்றேற் பந்தமோ க்ஷங்க ளில்லை
இவ்வுடல்க ளவத்தையபி மானியாதி
யிவைகளினுக் குயர்சாட்சி நீயாங் காணே. 61

விராட்டாதி சரீ ரங்கண் மூன்று மூன்றில்
விசாரிக்கி லன்னியமா யிருக்கை யாலே
விராட்டாதி சரீ ரங்கண் மூன்று மூன்றில்
விசாரிக்கின் முக்குணத்திற் செனித்த தாகும்
விராட்டாதி சரீ ரங்கண் மூன்று மூன்றில்
விசாரிக்கில் நீயறிவா யதுநீ யல்ல
விராட்டாதி சரீ ரங்கண் மூன்று மூன்றில்
விசாரிக்கி லுயர்சாட்சி நீயாங் காணே. 62

சிருஷ்டிதிதி சங்கார வவத்தை மூன்றுந்
தேர்ந்தறியி லந்நியமா யிருக்கை யாலே
சிருஷ்டிதிதி சங்கார வவத்தை மூன்றுந்
தேர்ந்தறியிற் பிரமாதி தொழில தாகுஞ்
சிருஷ்டிதிதி சங்கார வவத்தை மூன்றுந்
தேர்ந்தறியில் நீயறிவா யதுநீ யல்ல
சிருஷ்டிதிதி சங்கார வவத்தை மூன்றுந்
தேர்ந்தறியு முயர்சாட்சி நீயாங் காணே. 63

பிரமனொடு விட்டுணுருத் திரனை யூன்றிப்
பிரித்தறியி லந்நியமா யிருக்கை யாலே
பிரமனொடு விட்டுணுருத் திரனை யூன்றிப்
பிரித்தறியிற் சத்துவமே யீன்ற தாகும்
பிரமனொடு விட்டுணுருத் திரனை யூன்றிப்
பிரித்தறியில் நீயறிவா யதுநீ யல்ல
பிரமனொடு விட்டுணுருத் திரனை யூன்றிப்
பிரித்தறியு முயர்சாட்சி நீயாங் காணே. 64

விராட்டாதி யவத்தையபி மானி யீறாய்
வேறதனான் முக்கியசட் குணங்க ளில்லை
விராட்டாதி யவத்தையபி மானி யீறாய்
வேறதனாற் பிரபுத்துவ வலியே யில்லை
விராட்டாதி யவத்தையபி மானி யீறாய்
வேறதனா லட்டகுணங் களுமே யில்லை
விராட்டாதி யவத்தையபி மானி யீறாய்
வேறதனா லுயர்சாட்சி நீயாங் காணே. 65

சீவனீ சுரன்ஜகத்திம் மூன்றை யுந்தான்
    றேர்ந்தறியி லந்நியமா யிருக்கை யாலே
சீவனீ சுரன்ஜகத்திம் மூன்றை யுந்தான்
    றேர்ந்தறியின் முக்குணத்திற் செனித்த தாகுஞ்
சீவனீ சுரன்ஜகத்திம் மூன்றை யுந்தான்
    றேர்ந்தறியில் நீயறிவா யதுநீ யல்ல
சீவனீ சுரன்ஜகத்திம் மூன்றை யுந்தான்
    றேர்ந்தறியு முயர்சாட்சி நீயாங் காணே. 66

சத்துவமோ டிராசதமோ குணங்கண் மூன்றுஞ்
    சார்ந்தறியி லந்நியமா யிருக்கை யாலே
சத்துவமோ டிராசதமோ குணங்கண் மூன்றுஞ்
    சார்ந்தறியிற் பிரகிருதி யீன்ற தாகுஞ்
சத்துவமோ டிராசதமோ குணங்கண் மூன்றுஞ்
    சார்ந்தறியில் நீயறிவா யதுநீ யல்ல
சத்துவமோ டிராசதமோ குணங்கண் மூன்றுஞ்
    சார்ந்தறியு முயர்சாட்சி நீயாங் காணே. 67

ஆதியாம் மூலப்ர கிருதி யைத்தா
    னாயுங்கா லன்னியமா யிருக்கை யாலே
ஆதியாம் மூலப்ர கிருதி யைத்தா
    னாயுங்கா லுன்னிடத்தே விவர்த்த மாகும்
ஆதியாம் மூலப்ர கிருதி யைத்தா
    னாயுங்கால் நீயறிவா யதுநீ யல்ல
ஆதியாம் மூலப்ர கிருதி யைத்தா
    னாய்ந்தறியு முயர்சாட்சி நீயாங் காணே. 68

ஆதியா மூலப்ர கிருதி யோடே
யானதிரி குணமகதத் துவமாங் காரம்
ஆதியா மாத்திரையும் பஞ்ச பூத
மானசரா சரமுதலாய் மற்று மெல்லாம்
ஆதியா மப்பதனைத் தவிர வேறா
யானதிரை நுரைதிவலை குமிழி யில்லை
ஆதியாம் பிரம்மா முன்னின் வேறா
யானவைக ளணுவுமிலை யெல்லா நீயே. 69

பழுதையா டகமதிலே செனித்த தான
பணிமகுட கேயூர குண்ட லாதி
பழுதையா டகமதனைத் தவிர வேறோர்
பாரதனி லீதுபோற் செனியா நின்ற
பழுதிலறி வுண்மையா னந்த நித்த
பரிபூர ணப்பிரம சொரூபந் தன்னிற்
பழுதுளவாஞ் சீவே சுரஜ கத்தும்
பரிபூர ணப்பிரம மாகுந் தானே. 70

நித்தியமே கம்பூர்ணம் பரமா னந்த
நிமலகே வலபரதத் துவசத் தார்ந்தஞ்
சுத்தபரப் பிரம்மவச் சின்ன சீவ
சுயந்துரிய கூடத்த சாட்சி போதஞ்
சத்தியசஞ் சலரகித நிட்பிர பஞ்சஞ்
சருவசமஞ் சாந்தசூக் குமமே முத்தம்
புத்தநிதா நந்தத்துவ விபுவான் மாநீ
புத்திரனே நீயதுவா யாகு வாயே. 71

நிர்க்குணா னந்தபரப் பிரம நானே
    நிருலேப ஜகசீவ பரமு நானே
நிர்த்தோட வப்ரமே யனுமே நானே
    நிருபத்திர வசரீர தாணு நானே
நிர்ச்சம்பந் தனசல னணுவு நானே
    நிரிந்திரிய வப்பிராண சிவனு நானே
நிர்ச்சீவ நிர்விகா ரமுமே நானே
    நிர்விடைய கண்டமெலாம் நானே நானே. 72

பரமானந்த தீபம் முற்றிற்று

# அகஸ்தியர் அடுக்கு நிலை போதம்

சொல்பிறந்த விடமெங்கே முப்பா ழெங்கே
துவாரபா லகரெங்கே முதற்பா ழெங்கே
நல்லசங்கு நதியெங்கே வைகுந்த மெங்கே
நாரணனும் ஆலிலைமேற் படுத்த தெங்கே
அல்லல்படும் ஐம்பூத மொடுக்க மெங்கே
ஆறஞ்சுயிதழ் ரெண்டு முளைத்த தெங்கே
சொல்லவல்லா ருண்டானா லவரை நாமும்
தொழுதுகுரு வெனப் பணிந்து வணங்க லாமே 1

உந்தியெனு நிலையெங்கே அறுகோண மெங்கே
ஓங்கார நிலையெங்கே வுற்றவிடமு மெங்கே
மந்திரமுஞ் சாஸ்திரமும் பிறந்த தெங்கே
மறைநாலும் விரித்தவயன் தானு மெங்கே
முந்திவருங் கணபதியும் பிறந்த தெங்கே
முக்கோண முனையெங்கே யடிதா னெங்கே
இந்தவகை பொருளறிந்து சொல்வார் தம்மை
இறையவனென் றேகருதி யியம்ப லாமே 2

பற்பதத்தில் பொங்கிவரும் வழிதா னெங்கே
பரிந்துமுறை கொண்டுநின்ற அறிவு மெங்கே
உற்பனமாங் கருநின்று விளைந்த தெங்கே
யொருபாதந் தாங்கிநின்ற வடையாள மெங்கே
தற்பரமா யாகிநின்ற நிலைதா னெங்கே
சர்வவுயிரா யெடுத்த சிவனு மெங்கே
இப்பொருளை யறிந்துரைக்கும் பெரியோர் தம்மை
இறையவனென் றேகருதி யியம்ப லாமே. 3

அடிமுடியு நடுவான நிலையு மெங்கே
அறுசுவையுங் கொண்டொளித்த விடமு மெங்கே
வடிவான வைந்தலைமா ணிக்க மெங்கே
வரையான வூமையெனு மெழுத்து மெங்கே
இடமாக ஆடிநின்ற பாத மெங்கே
இச்சையுடன் பேசிநின்ற எழுத்து மெங்கே
அடைவாயிப் பொருளறிந்து சொல்வார் தம்மை
அடிதொழுது குருவென்று நம்ப லாமே 4

சற்குருவுஞ் சந்நிதியு மான தெங்கே
சாகாதகா லெங்கே வேகாத் தலையு மெங்கே
முப்பொருளு மொருபொருளாய் நின்ற தெங்கே
முனையெங்கே தலையெங்கே முகமு மெங்கே
நற்கமலமா யிரத்தெட் டிதழு மெங்கே
நாலுகை யொருபாத மான தெங்கே
இப்பொருளை யறிந்துரைக்கும் பெரியோர் தம்மை
இறையவனென் றேகருதி யியம்ப லாமே. 5

நஞ்சணிந்தான் முகந்தா னைந்து மெங்கே
ஞானக்கண் மற்றக்கண் மூன்று மெங்கே
அஞ்சுவுயிர்தனைக் கொடுக்கும் யேம னெங்கே
வாயிரங்கண் ணிந்திரனார் தாமு மெங்கே
பஞ்சறிவால் நின்றபரா சக்தி யெங்கே
பதினாலு லோகமனு மதுதா னெங்கே
வஞ்சமறப் பொருளறிந்து சொல்வா ராகில்
வணங்கிகுரு பரனென்று வாழ்த்த லாமே 6

நகைபிறந்த விடமெங்கே கோப மெங்கே
நரகமே மூாநரக மான தெங்கே
திகைத்து மறந்திடமெங்கே நினைப்பு மெங்கே
தீராத குறைவந்து சூழ்ந்த தெங்கே
பகைத்தவிடத் தானெங்கே ஒழுக்க மெங்கே
பகலிரவு யிருந்தவிடந் தானு மெங்கே
வகைபொருளை யறிந்துரைக்கும் பெரியோர் தம்மை
வணங்கிகுரு பரனென்று வாழ்த்த லாமே 7

ஆறுகால் முகமாறு மான தெங்கே
அறுபத்து நாலுகலை நின்ற தெங்கே
சீறுகால் பனிரெண்டிற் கழிந்த தெங்கே
செத்திடமுஞ் சாகாதிருந் திடமு மெங்கே
பூருவநீ யிருந்துவந்துபிறந் திடர்தா னெங்கே
புத்திதனி லன்பத்தோரட் சரமு மெங்கே
வேறு பொருளுரையா துள்ளபடியே சொல்வார்
மெல்லடியிலே பணிந்து மெலிய லாமே. 8

ஆதிகதிர் சந்திரனும் பிறந்த தெங்கே
அவரொடுங்கி நிற்குமது விடமு மெங்கே
சாதிபல வொன்றாகக் கண்ட தெங்கே
சத்திசிவ மென்றுபிரி யாத தெங்கே
ஓதியுணர்ந் தேபூசை மறந்த தெங்கே
வுச்சிட்ட நிட்டத்தே விடமு மெங்கே
சோதிபோல் ஞானமொரு பெற்ற பேர்கள்
சொல்லிய தெல்லாமுடலிற் சொல்லு வாயே. 9

இருள்பிறந்த விடமெங்கே ஒடுங்கிடமு மெங்கே
இரண்டுதிரு சங்குநின்ற விடமு மெங்கே
அருள்பிறந்து பாடிநின்ற விடமு மெங்கே
அறுத்தடைந்த வாசலொன்று கண்ட தெங்கே
திருப்பிறந்த விடமெங்கே எழுகிணறு மெங்கே
திருக்கிணத்தை யெறைக்கின்ற ஏத்த மெங்கே
விருப்பமுட னடுக்குநிலை போத கத்தை
விளம்பினோம் மெய்ஞ்ஞான அறிவு ளோர்க்கே 10

அகத்தியர் அருளிய
அடுக்குநிலை போதம் முற்றிற்று
**வள்ளிமலை சுவாமிகள்**

திட ஞானி தெரிசனமே தீர்த்த மடல்
திட ஞானி தெரிசனமே தேவ பூஜை
திட ஞானி தெரிசனமே ஜெபதபங்கள்
திட ஞானி தெரிசனமே செய்யும் அறங்கள்
திட ஞானி தெரிசனமே சிவத்தைக் காணல்
திட ஞானி தெரிசனமே சிவத்தின் சேவை
திட ஞானி தெரிசனமே மேவுதற்கு திரிவிதமாம் உலகத்து
அரிதாம் யார்க்கும்.

# நம் சிரசில் பரவி இருப்பார் அகத்தியர்

அங்கி உதயம் வளர்க்கும் அகத்தியன்
அங்கி உதயஞ்செய் மேல்பா லவனொடு
மங்கி உதயஞ்செய் வடபால் தவமுனி
எங்கும் வளங்கொள் இலங்கொளி தானே.

- திருமந்திரம் - 338

